கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

சத்தியவேத

# பாதுகாவலன்

மலர்: 97 இதழ்: 43
கார்த்திகை 11 — 1972
பிரதி சதம் 15

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## ஆழ்ந்த விசுவாசமும் உட்செறிந்த தூயவாழ்வுமே திருச்சபையின் அத்தியாவசிய தேவைகள்

—பரி. தந்தை

சென்ற மாதம் 22-ம் திகதி வத்திக்கானில் யாத்திரிகருக்கு அளித்த பகிரங்கப் பேட்டியில் பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் இன்றைய நாட்களில் திருச்சபை அவசியம் தேவைப்படுவது யாது எனக்கேட்டு, யாத்திரிகர் மனதில் சிந்தனையை எழுப்பி, தாமே விடையையும் அளித்தருளினார். ஆழ்ந்த விசுவாசமும் உட்செறிந்த தூயவாழ்வுமே இன்றைய நாட்களில் திருச்சபைக்குரிய அதி அவசிய தேவைகளென பரிசுத்ததந்தை கருதுகின்றார். உலகமெங்கும்போய் தமது சுவிசேஷத்தைப் போதிக்கத் திருச்சபைக்குக் கிறீஸ்துநாதர் கட்டளையிட்டு, உலகம் முடியும் வரையும் தாம் திருச்சபையுடனிருந்து அதற்கு ஏற்படக்கூடிய சகலபொல்லாங்குகளிலுமிருந்து அதைக் காத்தருள வாக்குப்பண்ணியிருக்கிறார். கிறீஸ்துநாதர் கொடுத்த கட்டளையில் பிரமாணிக்கமும் அவரது வாக்குறுதியில் முழுவிசுவாசமும் உடையவர்களாக நாமிருக்க வேண்டும். திருச்சபை ஒவ்வொரு வினாடியும் உலக சமூகத்துடன் தொடர்புகொண்டதாயிருக்கின்றது. இன்றைய சமூதாயத்தின் நிலைமையும் அதில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் திருச்சபைக்குரிய தேவைகளை அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இன்றைய உலகிற் [illegible] து நாதரின் சுவிசேஷத்தைப் போதிப்பது இலகுவான காரியமில்லை. ஆயினும், அவர் இட்ட போதனையில் விசுவாசமும், அளித்த வாக்குறுதியில் நம்பிக்கையுடையவராய் எமக்குத் தேவனிட்டிருக்கும் கட்டளையைச் செய்து முடிப்பது அவசியம். அதற்கு உகந்த உட்செறிந்த தூயவாழ்வும் மிகஅவசியமாகும். திருச்சபையானது கிறீஸ்துநாதரின் மறைஉடலாயிருப்பதன் தன்மையை விசுவாசிகள் நன்கு விளங்கி அந்நிலைமைக்கு ஏற்ற உட்செறிந்த தூயவாழ்வினராய் விளங்கவேண்டும். 2-ம் வத்திக்கான் சங்கத்தின் பயனை விசுவாசிகள் தமது எண்ணங்களினாலும், செபங்களினாலும், செயல்களினாலும், ஆன்மபலம் கூடியவர்களாக இருக்கின்றனர். இந்த ஆற்றல் மேலும் வளர்ச்சியுற நாம் உதவவேண்டும். அன்பு நிறைந்த உட்செறிவுற்ற வாழ்வு இன்று திருச்சபைக்கு மிகவும் அவசியமாகின்றது.

### சமய கருமங்களிலும் ஒற்றரா ?

தென் ஆபிரிக்க கத்தோலிக்க அதிமேற்றிராணியார் மகா வந்தனைக்குரிய ஹக்ஸ்லிகளாரும் பிறகிறீஸ்தவ சபைத் தலைவரும் அப்பிரிவின் கிறீஸ்தவ சமயபரிபாலனத்துக்கு ஏற்பட்டிருக்கும் புதியதோர் ஆபத்தைக் கண்டித்து அறிக்கை விடுத்திருக்கின்றனர். கிறீஸ்தவ சபைகளின் அதிகாரிகள் அந்நாட்டு அரசாங்கத்துக்கு இன ஒதுக்கக் கொள்கைகளில் காட்டிவரும் எதிர்ப்பை உளவுபார்த்து அறிவிக்க தாமும் கிறீஸ்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் பலரை அரசாங்கம் அண்மையில் நியமித்திருக்கிறது. அது மாத்திரமன்றித் தலைவர்களுக்கு அனுப்பப்படும் காகிதங்களும், தொலைபேசிச் செய்திகளும் அரசாங்கத்தின் கைகளில் சிக்கிக்கொண்டே வருகின்றன. இப்புதிய மானக்கேடான செயல்களில் அரசாங்கம் இறங்கியிருப்பதை அந்த அறிக்கை பகிரங்கமாகக் கண்டித்திருக்கின்றது.

### ஆட்சேபத்துக்குரிய சமய வினாவிடை நூலுக்கு வத்திக்கானின் தடை

வத்திக்கான் எது கருமத்தையும் அவசரப்பட்டு செய்வதில்லை என்பது யாவரும் நன்கு அறிந்த விஷயம். அதற்கு இணங்கவே ஒல்லாந்துதேச சமயப்பரிபாலனத்திலும் அது நடந்து வருகின்றது. சமீபகாலத்தில் ஒல்லாந்து தேசத்தில் இரு மறைமாவட்டங்களில் பாரம்பரிய கத்தோலிக்க போதனைகளில் மனத்தளர்வு ஏற்படக்கூடிய முறையில் ஒரு புதிய மாணவ சமயநூல் முன்னேற்ற தீவிர உணர்ச்சியின் பயனால் அப்பிரிவு ஆயர்களினாலும் அனுமதிக்கப்பட்டு பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கப்பட்டு வந்தது. அந்நூலில் ஆட்சேபத்துக்குரிய குறிப்புகளில் பாப்பரசரின் வழுவாவரமும் ஒன்றாகும். ஆட்சேபத்துக்குரியனவற்றை நீக்கிவிடுமாறு பல மாதங்களாகச் செய்துவந்துள்ள விண்ணப்பங்கள் பல நியாயங்களும் காட்டப்பட்டு செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆயின—ஆகவே, மேலும் விசுவாச தளர்ச்சி ஏற்படாதிருக்க இந்த சமய பாடவினாவிடையின் உபயோகத்துக்கு அண்மையில் வத்திக்கானால் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

### கத்தோலிக்க அச்சுச்சாலையின் வெள்ளி யூபிலி

சிலாப கத்தோலிக்க மேற்றிராசனத்தினால் நடப்பிக்கப்படும் புனித பேதுரு கைத்தொழிற் பயிற்சிச்சாலையின் பகுதியாகிய அச்சுஇயந்திர வேலை நிலையம் தனது வெள்ளியூபிலியைச் சென்ற வாரம் கொண்டாடியபோது சிலாப மேற்றிராசன துணை ஆயர் பிறங்க் மார்க்கஸ் பெர்னாந்து அடிகளார் அச்சாலையில் பயிற்றப்பட்ட இருநூறு பேருக்கு மேற்பட்டவர் தீவின் பல பாகங்களிலும் அச்சுத்தொழிலை உத்தம கத்தோலிக்கருக்குடைய விசுவாசத்துடனும் சுயநாட்டுப்பற்றுடனும் ஆற்றி இந்நாட்டுக்குத் தொண்டுசெய்ய உதவிய தேவனுக்குத் துதி செலுத்தினார். நிறுவனத்தின் இன்றைய தலைவர் வண. ஆசியன் பெர்னாந்து சுவாமியார் இக்காலத்தில் அத்தகைய பயிற்சிச்சாலையை நடத்துவதில் பெரும் கஷ்டங்கள் இருப்பினும் உத்தம கத்தோலிக்கரால் ஆற்றப்படும் அச்சுஇயந்திர சேவையால் வரும் ஆன்மநன்மைகள் மனதுக்கு ஆறுதலைத் தருவனவென்றார்.

## உயிர்த்த ஞாயிறுவுக்கு நிரந்தரமான தேதியா?

2-ம் வத்திக்கான் சங்கம் உயிர்த்த ஞாயிறுவுக்கு ஒரு நிரந்தரமான தேதி குறிப்பது பற்றி விவாதித்து மறுகிறீஸ்தவ சபைகளிடையே இது பற்றி ஒற்றுமை ஏற்படுமாயின் அதற்கு இணங்கவிருப்பம் தெரிவித்திருப்பது யாவரும் அறிந்த விஷயமாகும். மறு கிறீஸ்தவ சபைகளிடையே இதுபற்றி ஒற்றுமை விரைவில் ஏற்படுமென நம்பத்தக்க செய்திகள் கூறுகின்றன. அகில உலக கிறீஸ்தவசபைகள் நோர்விச் நகரில் இவ்வாரம்கூட இருக்கின்றனவென்றும், சித்திரை மாதம் வரும் 2-ம் சனிவாரத்தின் பின்வரும் ஞாயிறுதினமே உயிர்த்த ஞாயிறுவாக ஏற்றுக்கொள்ள பெரும்பான்மையினர் விரும்புகின்றனரென்றும், இக்கருமம் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்படுமெனவும் அச்செய்திகள் எடுத்துரைக்கின்றன,

### "அவஸ்தை"ச் சடங்கில் சில மாற்றங்கள்

அவஸ்தைச்சடங்கு என்றவுடனே இயற்கையாகவே வியாதிஸ்தருக்கு ஏற்படும் திகிலை ஓரளவு தணிக்கத்தக்க முறையில் இந்த இறுதித் தேவதிரவிய அனுமானம் புதிய மாற்றங்களுடன் திருச்சபையில் விரைவில் இடம் பெறுமென நம்பப்படுகின்றது. திருவழிபாட்டுமுறைத் திருத்தக் குழுவின் ஓர் அங்கத்தவரான ஜேர்மனி தேசக் குருவானவர் பல்தசார் அடிகளார் அண்மையில் இதை வெளியிட்டிருக்கின்றார். முன்னாளில் பஞ்சேந்திரியங்கள் திருத்தைலத்தினால் பூசப்பட்டுச் செபிக்கப்பட்டதற்குப் பதிலாக வியாதிஸ்தரின் நெற்றியில் மாத்திரம் பூசுதலும், குருவானவர் தன் கரங்களை வியாதிஸ்தரின் தலையில் வைத்து செபித்தலும் முக்கிய மாற்றங்களாகும். இச்சடங்கு திருப்பலியின் ஒரு பகுதியாகவும், ஆலயத்தில் வியாதிஸ்தர் சமுகத்தினருக்கும் அன்றேல் இல்லங்களிலும் நடைபெறலாம். புத்திவிபரம் அறிந்த சிறுபிள்ளைகளும் இதைப் பெற்றுக்கொள்ளலாம். கடுமையான வியாதியிருப்பவர்களுக்கு சற்பிரசாதம் கொடுக்குமுன் இச்சடங்கு செய்யப்படலாம்.

### கத். திருச்சபை இன்னும் சேராதிருப்பதேனோ?

உலக கிறீஸ்தவ சபைகளின் சங்க முன்னாள் செயலாளர் இவ்வாண்டு இறுதியில் தமது பதவியிலிருந்து ஓய்வுபெறுமுன் கிறீஸ்துவ ஒற்றுமை இயக்கத்தைப்பற்றியும் தமது சங்கத்தில் கத்தோலிக்கசபை இன்னும் சேராதிருப்பதன் காரணம் பற்றியும் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறியிருக்கிறார். ஒற்றுமை இயக்கம் தன் நோக்கத்தில் பூரண வெற்றிகாண்பதற்கு மேலும் சிலகாலம் அவசியமென்றும், பல நூற்றாண்டுகளின் பகைமையும் ஐயுறவும் வத்திக்கான் சங்கத்தின்பின் பத்தாண்டுகளில் ஒதுக்கப்படுவது சாத்தியமல்லவென்றும் விளக்கியிருக்கின்றார். எனினும் இச்சிறுகால எல்லையுள் ஆச்சரியத்துக்குரிய முன்னேற்றங்கள் காணப்பட்டிருப்பது மிகவிரைவில் பூரண ஐக்கியம் ஏற்படுமென்பதற்கு நல்ல அறிகுறியென்றும் அவர் கூறினார். அவரது சங்கத்துக்கும் கத். திருச்சபைக்கும் இன்றுள்ள ஒற்றுமை நிலைமையை சிறந்த ஒத்துழைப்பு நிலைமை என்றும், ஆயினும் கத்தோலிக்கர் பூரண அங்கத்துவத்துடன் இன்னும் உத்தரவாதிகளாகவில்லையெனவும் கூறினார்.

## கிறிஸ்தவ ஐக்கிய முதல்வர் லோட் பிஷ்சர்

கன்ரர்பறி முன்னாள் அங்கிளிக்கன்சபை அதிமேற்றிராணியாரான லோட் பிஷ்சர் அவர்களின் ஆன்ம சாந்திக்காகப் பேர்மிங்காம் நகரில் நடைபெற்ற குருமார் மகாநாட்டின் முடிவுநாள் பூசையிலே கருதினால் ஹீனன் ஆண்டகை செபங்கள் செய்து ஒப்புக் கொடுத்தார். முந்திய வியாழக்கிழமை தமது 85ஆம் வயதில் காலஞ்சென்ற டக்றர் பிஷ்சரைப் பற்றி அவ்வேளை கருதினால் ஆண்டகை பேசியது வருமாறு:

"கத்தோலிக்க திருச்சபையிலே கிறிஸ்த ஐக்கியம் தீவிர முன்னேற்றம் அடைந்து துரிதமாகச் செயல்படுவதற்கு அநேகமாக மற்றெவரைக் காட்டிலும் அதிகம் பொறுப்பாளியாக இருந்தவர் டக்றர் பிஷ்சர் அவர்களே ஏனெனில், மிகுந்த திடதைரியத்துடன் தமது சுயஆரம்பமாக அருளப்ப பாப்பானவரைச் சந்திக்கத் தாம் அழைக்கப்படவேண்டுமென அவர் தாமாகவே முந்தக்கேட்டுக்கொண்டார். அக்காலத்திலே புரொட்டஸ்தாந்தரிடையே எழுந்த குரோத எழுச்சிகளை அவர் துணிகரமாக எதிர்த்து நின்று வெற்றிகண்டார். 1960ஆம் ஆண்டு மார்கழி மாதம் அவர் அருளப்ப பாப்பானவரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு சிறந்த அனுகூலத்தை அளிக்கவே, அவரிடமாகவந்த கன்ரர்பெறி அதிமேற்றிராணியாரான டக்றர் றம்சே அவர்கள் முன்னிலும் அதிகம் இதய பூர்வமாகச் சின்னப்ப பாப்பரசரைச் சந்திக்க வழிதிறந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைச் சீர்திருத்துவோம் என்றான் சீர்திருத்தவாதி. உன்னை நீ சீர்திருத்து; என்னை நான் சீர்திருத்துகிறேன்; உலகம் தானகச் சீர்திருந்திவிடும் என்றார் துறவி.

## *சத்தியவேத பாதுகாவலன்*

### மனதில் ஊறும் நஞ்சு

காற்று அசுத்தப்படுத்தப்படுவதால் மக்களுக்குவிளையும் தீங்குகளை நாம் அறிவோம். அணுக்குண்டின் நச்சுக்காற்று மட்டும் அன்று, புகை போக்கிகளிலும், தொழிற்சாலைகளிலும் இருந்து தெளிவரும் நச்சுவாயுக்கள்கூட எத்தனையோ நகரங்களில் மக்கள் உடல்நலனுக்கு ஊறுசெய்கின்றன எனக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

காற்றிலுள்ள அசுத்தம் சூழலைக் கெடுப்பது போலவே இன்னொருவிதமான நச்சுத்தன்மையும் உண்டு. இங்கு மக்களின் மனதில் அந்த அசுத்தமும் நச்சுத்தன்மையும் ஊட்டப்படுகிறது. அதனால் அவர்களின் ஆத்துமங்களுக்கு ஊறு நேர்கின்றது. உண்மையும் நன்மையும் பொருந்திய மனித இலட்சியங்களை, அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்களை விகாரப்படுத்திக்காட்டும் சாதனங்களுக்குக் குறைவில்லை. உலகில் நடக்கும் முறைகேடுகளெல்லாம் கொட்டை எழுத்துக்களில் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. மனிதர்களின் துர்நடத்தைகள் எந்த மூலைமுடுக்கிலும் இருப்பதை விட்டு எல்லாவிதமான தொடர்பு சாதனங்களின் மூலமும் பரப்பப்பட்டு இளைஞர், வயோதிபர், மனமாசற்றவர், கீழ் மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் ஊறி அவர்களின் எண்ணங்களையும் செயல்களையும் பாதிக்கின்றன. இதனற் பெரிதும் பாதிக்கப்படுபவர் இளைஞரே. முதிர்ச்சியடையாதவர்களும் உறுதியற்றவர்களும் தம்மையறியாமலே இவ்வலையில் வீழ்ந்துவிடுகின்றனர். தீய காரியங்களுக்கு மெருகுகொடுத்துக் காட்டப்படுவதால் அவை அத்தியாவசியமானவை அல்லது தம் வாழ்க்கைக்கு இன்பத்தைக் கொண்டுவருபவைஎன எண்ணிவிடுகின்றார்கள்.

இந்தப் பகிரங்க ஒழுக்கக் குறைவை "இவ்வுலகத்தின் மனப்பான்மை" என வேதாகமம் கண்டிக்கின்றது. இவ்வுலக மனப்பான்மைக்குக் காரணகர்த்தா பொய்யின் தந்தையாகிய பசாசுதான். நாம் இயல்பாகவே சரீரசுகத்தையும், சௌகரியத்தையும் நாடுபவர்கள். ஒறுத்தலையும் கடின வாழ்வையும் விரும்பாதவர்கள். இந்தத்தன்மையை அடிப்படையாக வைத்துக்கொண்டே பசாசு தந்திரமாக வேலைசெய்கின்றது. மனம் போன படியெல்லாம் நடப்பதுதான் சுதந்திரமென்றும், நடப்பதையெல்லாம் ஊருக்கு அறிவிப்பதுதான் பேச்சுச் சுதந்திரமென்றும், மனிதவாழ்வின் தவறுகளைச் சுவையான செய்திகளென்றும் நம்பச்செய்கிறது.

இவ்வாறு பொதுமக்களின் மனதைக் களங்கப்படுத்தும் காரியங்களை எம்மைச் சுற்றிவர எங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. பத்திரிகைச்செய்திகளிலும், திரைப்படங்களிலும் நாம் காணும் பல அம்சங்கள் இதற்கு ஏதுவாயிருக்கின்றன. அவை சனங்களைக் கவருவதற்காகக் கையாளும் உபாயங்கள். எப்போதும் தீங்கற்றவை என்று சொல்லமுடியாது. பரபரப்பான செய்திகள், பகட்டான விளம்பரங்கள், சுவையான சில கதைகள், காட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனி தீங்கற்றவையாக இருந்தபோதிலும், அவற்றையே தொடர்ந்து படிக்கும் ஒருவருக்கு இவ்வுலக மனப்பான்மையை அவை ஏற்படுத்தத் தவறுவதில்லை. இதன் காரணமாக மக்களின் இலட்சியங்கள், சமயப்பற்று ஆகியவை மழுங்கிப்போய் விடுகின்றன.

மருந்து விற்பவர்கள் ஒவ்வொரு மருந்துக்கும் பெயர் ஒட்டாமல் விடுவதில்லை உட்கொள்ளக் கூடாதவை, நச்சுத்தன்மை உடையவை எவையெனத் தெளிவாக வெளியில் எழுதி ஒட்டப்பட்டிருக்கும் ஆனால், அச்சில் வெளிவரும், அல்லது திரையில் காட்டப்படும் காரியங்களுக்கு அத்தகைய எச்சரிக்கை ஒன்றும் இல்லை. நாட்டில் அவை எங்கும் பரந்து கிடக்கின்றன. இவற்றைத் தடைசெய்வது கடினம். ஆனால் கத்தோலிக்கர் தம்மால் ஒன்றும் முடியாதுஎன வாளா இருப்பது தவறு. கிறிஸ்தவ சிந்தனை நிறைந்த இலக்கியங்களைப் பரப்புவதற்குத்தம்மாலானமட்டும்முயலவேண்டும். மதச்சார்பற்ற காரியங்களிலும் கிறிஸ்தவ பண்பாடும், ஒழுக்கமும் விளங்குமாறு செய்யவேண்டும். அத்துடன் தம்மாலானவரை நல்ல இலட்சியங்களையும், நன்மையான பண்புகளையும் பிறர் அடைவதற்கு வழிகாட்டவும் வேண்டும்.

மூன்றாவது உலகயுத்தம் இனி வரப்போவதில்லை. அது ஏற்கனவே வந்துவிட்டது. மக்கள் வேகமாகத் தங்கள் அழிவைத் தேடிக் கொள்கிறார்கள்.

# பெற்றோர்களும் ஆசிரியர்களே!

கல்வித்துறையில் பல புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்ந்து வரும் காலமிது. தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவருகின்றது. வரவேற்கத்தக்கதே. பிள்ளைகள் பள்ளிபுகும்வயது உயர்த்தப்பட்டுள்ளது. எது எப்படியிருந்தும் இளைஞர்களிடையே ஒழுக்கமும், கட்டுப்பாடும் அருகி வருகின்றதென்பதைக் கடந்தகால நிகழ்ச்சிகள் உணர்த்துவதோடு மட்டுமல்லாமல், பொறுப்புள்ள தலைவர்கள் தினமும் இதைப் பற்றிச் சுட்டிக்காட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இத்தச் சூழ்நிலையில், "கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; வேலைகொடுக்க அரசாங்கம் இருக்கின்றது" என்ற மனப்பான்மையை விட்டொழித்து, பெற்றோர்கள் வீட்டில் தாங்களும் ஆசிரியர்களாக மாறிக் கடமையாற்ற வேண்டியகாலம் வந்துவிட்டது.

இறபொட் பிரவுனிங் என்ற ஆங்கிலக் கவிஞருடைய வாழ்க்கையிலிருந்து ஒருசுவையான செய்தி கிடைக்கின்றது. இந்தக் கவிஞருடைய தந்தை ஒரு நாள், கோமரி என்ற பெருங்காவியத்தைப் படித்துக்கொண்டிருந்தார். "அப்பா நீங்கள் என்ன படிக்கிறீர்கள்?" என்று வினவினன், 5வயது நிரம்பாத பிரவுனிங். "டிரோய் (Troy) என்ற நகரை எப்படிக் கைப்பற்றினர்கள் என்பதைப்பற்றிப் படிக்கிறேன் மகனே" இது தந்தையின் பதில். பிரவுனிங் விட்டபாடில்லை. 'டிரோய் என்றால் என்னப்பா?' 'அதுஒரு நகரம் சரி ஓடிப்போய் விளையாடு' என்று நாங்கள் சொல்லியிருப்போம். ஆனால் பிரவுனிங்கின் தந்தை வித்தியாசமானவர். உடனே அந்த அறையிலிருந்த நாற்காலிகளும் மேசைகளும் 'டிரோய்'நகரமாக மாறியது. பெரியநாற்காலியில் இறபொட் அமர்த்தப்பட்டான். "இதோ பார், இந்த நகரத்தின் இராசா நீதான். அதோ, அந்தச் சிறிய நாற்காலியின்கீழ் தூங்குகிறதே பூனை, அவள்தான் கெலன். வெளியே நமது தோட்டத்தில் உலாவும் நாய்கள்தான் எதிரிகள். இந்த அழகான பூனையைப் பிடிக்கத் தருணம்பார்த்துக் கொண்டிருக்கின்றன. கெலன்-டிரோய் கதையை அப்படியே படம்பிடித்துக் காட்டிவிட்டார், அந்த ஆசிரியத் தந்தை. பின்பு பெரியவனானதும் இறபோட்டுக்கு அவரது தந்தை இலியாட்டின் மொழிபெயர்ப்பைக் கொடுத்தபொழுது, அவ்விளைஞன் அக்காவியத்தைப் பெரிதும் சுவைத்து மகிழ்ந்தானும்.

பெற்றோர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பங்கள் ஏராளமாக வரும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளை நேசித்தாலும் நேசிக்கவிட்டாலும், நிராகரித்தாலும் நிராகரிக்கா விட்டாலும் பிள்ளைகள் எந்நேரமும் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். பிள்ளைகளுக்குக் கடுமையான வேலைகளைக் [illegible] து மாலையானதும் குடித்து விட்டு வீடுதிரும்பும் தந்தையிடமிருந்தும் பிள்ளைகள் கற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். இத்தந்தை தன் பிள்ளைக்குக் குடிக்கக் கற்றுக்கொடுக்காமல் இருக்கலாம். ஆனால், அந்தப்பிள்ளை அவரிடமிருந்து எதையோ கற்றுக்கொண்டுதானிருக்கின்றது.

இத்தகைய 'கற்பித்தல்' பள்ளியில் பாடம் கற்பிப்பதைப் போலல்ல; "கடவுள் எங்கே இருக்கிறார்" என்ற கேள்வியிலிருந்து, "சவுக்காரம் எப்படிச் செய்யப்படுகின்றது" என்பதுவரை பிள்ளைகள் கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பார்கள். இரயில் பயணம்பண்ணும் பிள்ளையைப் பாருங்கள். எவ்வளவு ஆர்வத்தோடு கேள்விகள் கேட்டுக்கொண்டே இருக்கும். "தந்திக் கம்பங்கள் ஏன் பின்னுக்குப் போகின்றன?" என்று கேட்கும் குழந்தைக்கு "சீ, சும்மா இரு" என்றுசொன்னல், அதன் ஆவலை நாங்கள் கிள்ளி எறிகிறோமா இல்லையா? "வளர்ந்தவர்கள் எல்லாம் இப்படித்தான் சிடுசிடு என்று இருப்பார்கள் போலும்" என்று நினைப்பார்கள். இதன் விளைவாக உலகைப் பற்றியிருக்கும் இயற்கையான ஆவல் குறைவிடும். கையப்புடைத்துக் கண்ணீர் விட்டுத்தான் கல்விகற்கப்படவேண்டும் என்ற கொள்கையை விட்டு, "விளையாட்டு" முறைகளைக் கையாண்டு கல்வியை ஒரு களிப்புள்ள செய்கையாக மாற்றிக்கொள்ள வேண்டும். "பிள்ளைகளுடைய அறிவு ஒடுங்கிய கழுத்தையுடைய போத்தலைப் போன்றது. சொட்டுச் சொட்டாகத்தான் அறிவை ஊற்றவேண்டும். அதிகம் ஊற்ற முயன்றால் கீழேசிந்தி வீணாகிவிடும்" என்கிறார் ஓர் உளநூல் வல்லுனர்.

பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள தொடர்பு இத்தகைய கல்வி புகட்டுதலில் வளரவேண்டும் என்று கருதுகின்றார்கள், உளநூல் வல்லுனர்கள். சிலர் போதியளவு அன்பைக்கொட்டி வளர்த்தால் போதும் என்று கருதுகின்றனர். இது அறிவீனம். அன்பிற்கு இடமுண்டு. ஆனால் அதோடு கட்டுப்பாட்டிற்கும் இடமுண்டு என்பதை மறந்துவிடலாகாது. பல்தீட்டுவதிலிருந்து, பணம்செலவளிப்பது எப்படி என்பதுவரை பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டியது பல. இவற்றையெல்லாம் பள்ளிக்கூடம் கற்றுக் கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது அறிவீனம். வெறுமையும் விவேகமும் திறமையும் உள்ள பெற்றோர்கள் ஆசிரியராகவேண்டியநிலை இங்குதான் உதயமாகின்றது. கத்தோலிக்க பெற்றோர்களுக்குரிய கடமை இங்குதான் ஆரம்பமாகின்றது ஏனெனில் கத்தோலிக்க கல்லூரிகள் சமயத்தையும், ஒழுக்கத்தையும் போதித்த காலமபோய், மிஞ்சியிருக்கும் கல்லூரிகளிலேயே அதைப் போதிக்கவுள்ள வசதிகள் அருகிவரும் காலமாகையால், கத்தோலிக்க பெற்றோர்களுடைய பொறுப்பு அதிகரித்து விட்டது. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் தத்தம் உள்ளக்கிடக்கைகளைத் தாராளமாக வெளியிடப் போதிய சுதந்திரம் இருக்கவேண்டும். ஆனால் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கையிலே கண்ணியம் கெடாமல்பார்த்துக்கொள்ளவேண்டும். இன்றைய இல்லங்களிலே பெற்றோர் பெரியவர்களின் உள்ளம்நோக பிள்ளைகள் வீண் வார்த்தைகளை வரம்பின்றி அள்ளிவீசுவதைப் பார்க்கின்றோம். பிள்ளைகள் பெற்றோர்களை வெறுக்கும் சந்தர்ப்பங்கள் வருவது இயல்பு. தவிர்க்கமுடியாதது. ஆனால் இந்த வெறுப்பை அவர்கள் எவ்வாறு சமாளிக்கின்றார்கள் என்பதில் தங்கியுள்ளது அவர்களுடைய எதிர்காலம். அவர்களுக்குண்டாகும் வெறுப்பை சினத்தை எப்படிச் சமாளிக்க வேண்டும், அதை எப்படி பண்போடு வெளிக்காட்ட வேண்டும் என்பதை அவர்கள் உணரக் காட்டிக்கொடுக்க வேண்டும். இல்லங்களிலே உறுதியான ஒழுங்குமுறைகள் நிலைநாட்டப்பட வேண்டும். ஆனால் நீங்கள் வைக்கும் சட்டங்களுக்கு வரம்புகள் இருக்க வேண்டும். தான் எந்த அளவிற்குப் போகவேண்டும் என்ற எல்லையை அறிந்த பிள்ளைக்கு வாழ்வது ஒரு சுமையாகவே இருக்கமுடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு குடும்பத்தில் நாலு பிள்ளைகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்கள் எல்லோரும் அடக்கமாக, அமைதியாக இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவீனம். சண்டைகள் இருக்கத்தான் செய்யும். நன்றாகப்பிடிக்கட்டும். ஆனால் அதற்கும் விதிகள்இடுங்கள். "உங்கள் சப்தம் அயலவரின் அமைதியைக் குலைக்கக்கூடாது. வீட்டுப்பொருட்களை உடைக்கக் கூடாது ......" இவ்வாறு விதிகள் வைப்பதில் என்ன தவறு இருக்கின்றது? பெற்றோர்களுக்கும் உரிமைகள் இருக்கின்றன. இவை பாவிக்கப்படா விட்டால் நாளடைவில் செயலற்றுப் போய்விடும் என்கிறார் கில்பட் கைற்றுஎன்ற அமெரிக்க உள்நூல் வல்லுனர் "கற்பிக்கும் கலை" என்ற தமது நூலில்.

இளைஞர் சமுதாயம் வழி தெரியாமல் தவிப்பதை நாம் எங்கும் காண்கிறோம். கிறிஸ்துவின் உறுதியான, உண்மையான வழி நமக்கு இருக்கின்றது. அதை எடுத்துச் சொல்ல கத்தோலிக்க பெற்றோர்களை விட வேறுயாருக்கு உரிமை இருக்கின்றது? அது மட்டுமல்ல, அவற்றை வாழ்ந்து காட்டவும் அவர்களுக்குக் கடமை இருக்கின்றது.

பி. ஏ. சி. ஆனந்தராசா,
B. SC. DIP. IN. EDU.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டிய அறையில்.....

எம். ஜோர்ஜ் ராஜேந்திரன்,
புனித சவேரியார் கல்லூரி, நவரெலியா.

(சென்றவாரத் தொடர்ச்சி)

காலையில் வழக்கத்திற்கு மாறாக நேரத்தோடு எழுந்தேன். காலைக்கடன்களை முடித்துவிட்டு, குருவானவர் எப்பொழுது எழுந்துவந்து அந்த வெள்ளை நிறக் கதவைத் திறந்துவிடுவார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அவர் வழக்கம்போல் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்துவந்து அந்தக் கதவைத் திறந்துவிட்டு, மீண்டும் தமது அறைக்குப் போய்விட்டார். நான் அவரின் அறைக்குப் பக்கத்திலிருந்த ஓர் அலமாரியின் பின்னால் மறைந்துகொண்டேன். அவர் கோவிலுக்குப் போகவேண்டிய ஆயத்தத்தோடு அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தார். அவரின் பின்னால் யாரும் வருவார்கள் என்று எதிர்பார்த்தேன் ஒருவரும் வரவில்லை. அவரது கண்கள் சிவந்து, முகம் வாடிப்போய் இரவு நித்திரை இல்லாததைத் தெட்டத்தெளிவாகக் காட்டியது. நடக்கத் தன்னும் சக்தியற்றவர்போல நடந்துவந்து, அருகில் இருந்த மேசையின்மேல் ஒரு திறப்பையும், தனது கைக்குட்டையையும் வைத்துவிட்டு வேறொரு அறைக்குச் சென்றார். நான் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தேன். திறப்பை எடுத்து மெதுவாகப் படுக்கை அறையின் பூட்டைத் திறந்தேன். திறந்ததும், திறப்பை எடுத்து பழைய இடத்திலேயே வைத்துவிட்டு மீண்டும் மறைவிடத்துக்குச் சென்று மறைந்து நின்று கவனித்தேன். குருவானவர் ஒரு புத்தகத்தோடு வெளியேவந்து திறப்பை மட்டும் எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றார். அவரின் கைக்குட்டை மேசையின்மேலேயே கிடந்தது. அவர் செல்லும் பொழுது கதவைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

நான் வெளியேவந்து பூட்டை எடுத்துவிட்டு அந்தப் படுக்கை அறையின் கதவைத் திறந்தேன். அறையினுள் நுழைந்ததும், என் உடலில் ஒருவித நடுக்கமும், எங்கோ நுழையக்கூடாத இடத்தில் நுழைந்துவிட்டேன் என்ற உணர்ச்சியும் ஏற்பட்டது. வெளியே மேசையின்மேல் இருக்கும் கைக்குட்டையை எடுக்கக் குருவானவர் வந்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்ததும் குளிரான அந்த நேரத்திலேயே என் உடல் வெயர்க்கத் தொடங்கியது.

கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு அவசர அவசரமாக அந்த அறையை ஆராயத்தொடங்கினேன். கண்கள் முதலில் நோட்டமிட்டது அந்த அறையிலிருந்த கட்டிலைத்தான். கட்டில் விரிப்பில் செக்கச் செவேரென்று இரத்தத் துளிகள் காய்ந்துபோய் இருந்தது. இதைக் கண்டதும் என்றுமில்லாத அதிர்ச்சி எனக்கு ஏற்பட்டது. அந்த அதிர்ச்சியோடு பின்னால் திரும்பினேன். யேசுநாதர் பூங்காவனத்தில் இரத்த வெயர்வை வெயர்த்த படம் ஒன்று இருந்தது. அந்தப் படத்தின் கீழே ஒரு மேசை இருந்தது. அந்த மேசையின் மேலே இருந்த பொருளைக் கண்டதும் என்மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது. என் கண்கள் பயத்தால் அப்படியே நிலைகுத்திப்போய் நின்றன. இமைகள் இமைக்க மறந்தன.

அந்த மேசையின்மேல் இரத்தத்தில் துவைந்துபோய் இருந்த ஒரு கசை இருந்தது. அந்தக்கசை சுமார் ஐந்தடிநீளமிருக்கும். அந்தக் கசையின் இழைகளிலே மீன்பிடிக்கப் பயன்படும் கொக்கிகளைப் போன்ற கூரிய முனைகளையுடைய ஏழு கொக்கிகள் இணைக்கப்பட்டிருந்தன. அந்தக் கொக்கிகளிலும் இரத்தம் காய்ந்து உறைந்துபோய் இருந்தது. இதையெல்லாம் பார்க்க எனக்குவியப்புக்குமேல் வியப்பாகவும் பயமாகவும் இருந்தது. அதே நேரத்தில் வெளியே வாசல்கதவு திறக்கும் சப்தமும், அதைத்தொடர்ந்து குருவானவரின் காலடியோசையும் கேட்டது. இப்பொழுது என் இதயம் துடிக்கும்சப்தம் என் காதுகளுக்கே [illegible] கேட்டது. இலேசாகத் [illegible] தலை சுற்றுவது போலவும் இருந்தது.

அடுத்தநிமிடம் கதவை மூடிக்கொண்டு மீண்டும் அந்த மறைவிடத்தை நோக்கி ஓடினேன். எனக்குமுன்னே குருவானவர் வந்துகொண்டிருந்தார். சிலசமயம் என்னைக் கண்டிருப்பாரோ என்று நினைத்த பொழுது என் உடலில் மின்சாரம் பாய்ந்ததுபோல இருந்தது. வந்தவர் மேசையின் மேல்இருந்த கைக் குட்டையை எடுத்துக்கொண்டு திரும்பினார். திரும்பியவரின் முகத்தில் வியப்புக்குறி தோன்றியது. அவரின் பார்வை கதவில் தொங்கிக்கொண்டிருந்த பூட்டின்மேல் இருந்தது. நான் அவசரத்தில் ஓடிவந்ததால் பூட்டைப் பூட்டிவிட்டு வருவதற்கு மறந்திருந்தேன். என்ன நடக்கப் போகிறதோ என்று யோசித்துக் கொண்டேன். குருவானவர் சுற்றும் முற்றும் பார்த்தார். பூட்டை அமுக்கிப் பூட்டிவிட்டு வெளியே சென்றார். அந்த சொற்பநேரத்தில் நான் அடைந்த அனுபவம் வேறுயாருக்கும் ஏற்பட்டிருக்காது, ஏற்படவும் கூடாது என்று வேண்டிக்கொண்டு வெளியே வந்தேன்.

பூட்டிய அந்த அறையில் ஏதோ மர்மம் இருக்கவேண்டுமென்று நான் நினைத்தது சரியாக இருந்தது. படுக்கை விரிப்பிலும், அந்தப் பயங்கர கசையிலும் இரத்தம் எப்படி வந்தது? நேற்றிரவு ஒரு பெண்ணின் அனுங்கல்போல் அந்த அறையில் கேட்டதே? என்ன நடந்தது? இப்படிப் பலகேள்விகள் என் உள்ளத்தில் எழுந்தன. இதையெல்லாம் நினைத்துப் பார்த்தபொழுது என்னால் ஒரேயொரு முடிவுக்குத்தான் வரமுடிந்தது. நேற்றிரவு குருவானவர் அறையில் ஏதோ பலாத்காரச் செயலொன்று நடந்திருக்கிறதென்று.

இதுவரை அவர் என்மட்டில் கொண்டிருந்த பரிவும், அன்பும், காட்டிய பேருதவி யாவையும் மறந்து, [illegible]டம் கொண்டுள்ள மதிப்பும் கண்ணியமும்மரியாதையாவும் படிப்படியாய்க் குறைந்து மாறாக, அவர்மேல் வெறுப்பும் அருவருப்பும் ஏற்பட்டு என் உள்ளத்தில் ஏதேதோ பொல்லாத தீர்மானங்கள் எல்லாம் அலையலையாய் உருவாகிக் கொண்டிருந்தன.

பூசைக்கும் நேரமாகிக் கொண்டிருந்தது. இன்று பூசைக்குப் போவோமா என்று கூட நினைத்தேன். ஏனெனில் இப்படியான ஒரு குருவானவரின் கரத்தால் ஒப்புக்கொடுக்கும் பூசையை நான் ஏன்காண வேண்டும் என்ற ஒரு கேள்வி என் உள்ளத்தில் எழுந்திருந்தது. மற்றொருவகையில் யோசித்தேன்— அதாவது, பூசைப் பலியில் பலிப்பொருளாகவும், நம் ஆன்ம உணவாகவும், பலி செலுத்தும் குருவாகவும் இருப்பது யேசுக்கிறீஸ்துதானே. அதனால் நாம் போவதால் எவ்வித தவறும் இல்லை என்று நினைத்து மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டு பூசைக்குப் போனேன்.

(வளரும்)

# உத்தரிப்பு ஸ்தலம்

சி. எஸ். நாயகம்,
பத்தாவத்தை, இளவாலை.

"உத்தரிப்புஸ்தலம் என்பது அக்கினியால்நிறைந்த வேதனை ஸ்தலம். அற்ப பாவங்களோடு மரித்தவர்களின் ஆத்துமங்கள் சுத்திகரிக்கப்படும் இடம். அதாவது பொன் நெருப்பில் புடமிடப்படுவதுபோல் இந்த ஆத்துமங்களும் தங்கள் பாவக் கறைகளைப்போக்கிச் சுத்திகரிக்கும் இடம். தங்கள் பாவக் கடன்களை கடைசிச் சல்லி வரையும் உத்தரித்துத் தீர்க்கும் இடம். சுருங்கச்சொல்லுமிடத்து, தங்கள் பாவங்களுக்காக முற்றுமுழுதும் இந்த அக்கினிச் சுவாலையில் கிடந்து உத்தரிக்கும் இடம். இந்த அகோர ஸ்தலத்தில் கிடந்து வேதனைப்பட்டுப் பரிசுத்தமாக்கப்பட்ட பின்பே, இந்த ஆத்துமங்கள் மோட்சகரை சேருவார்கள். அப்படியானால், இவர்களுடைய உத்தரிப்பின் கால எல்லை என்ன? அதைச் சொல்ல முடியாது. அவரவர் கட்டிக்கொண்ட அற்பபாவங்களின் தன்மைக்கேற்றவாறு, அது ஒரு மணித்தியாலமாயிருக்கலாம், ஒரு நாளாயிருக்கலாம், ஒரு கிழமையாயிருக்கலாம், ஒரு மாதமாயிருக்கலாம், ஒரு வருஷமாயிருக்கலாம், பல வருஷங்களாயிருக்கலாம், ஒரு வேளை உலக முடிவுமட்டுமாயிருக்கலாம். இது அவரவர் பாவத்தின் கனத்தைக் கொண்டதாகும். இவ்வுலகில் நாம் புரியும் குற்றங்களுக்கேற்ற முறையில் மரணத் தண்டனையோ, ஆயுள் தண்டனையோ, பலவகையான கால எல்லையைக் கொண்ட மறியல் தண்டனையோ இருப்பதுபோல, நமது ஆத்தும விஷயத்திலும் சாவானபாவத்தோடு மரித்தவர்கட்கு என்றும்மீளா நித்தியநரகத் தண்டனையும், அற்ப பாவத்தோடு மரித்தவர்கட்கு அவரவர்பாவத்துக்குத்தக்க அநித்திய தண்டனையாக உத்தரிப்புஸ்தலம் என்னும் சிறைச்சாலையில் பலவிதகால எல்லைக்குட்பட்ட மறியல் தண்டனையும் இருக்கும். இந்த இருவித "நரக" "உத்தரிப்புஸ்தலம் என்னும் சிறைச்சாலைகளில் கிடந்து புழுக்கள்போல் துடித்துப் பதைத்து இந்த அக்கினிச் சுவாலைகளில் வேதனைப்படும் ஆத்துமாக்களுக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், மோட்சத்தை அனுபவிக்கும் ஆத்துமாக்களுக்கோ ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவுமிருக்குமென்று சொல்லுமிடத்து, இந்த நரகம்—உத்தரிப்புஸ்தலத்திலகிடந்து வேதனைப்படும் ஆத்துமாக்களின் கதி என்னாகும் என்பதை நினைக்கும்போது நாம் எவ்வளவு அச்ச நடுக்கத்தோடு நம் ஆத்துமகாரியத்தை—நம் இரட்சணிய அலுவலைக் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இதில் "உத்தரிப்புஸ்தல"த்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களுக்கிருக்கும் ஒரேயொரு ஆறுதல் என்னவெனில், தங்கள் உத்தரிப்புக்கடன் நீங்கியபின் மோட்சம் என்னும் நம்பிக்கையே ஆனால், நரகவாசிகளுக்கு அப்படியன்று. அவர்கள் நித்தியம் நித்தியமாய் ஊழியுள்ள காலமாக அந்த அகோரமான அக்கினிச் சுவாலையில் நிர்ப்பாக்கியராய்க் கிடந்து வேதனைப்படுவார்கள். எனவே, நாம் இந்த நரகவாசிகளுக்கு ஞானவகையில் எவ்விதஉதவி புரிவதிலும் பிரயோசனமில்லை. எவ்உதவியும் அவர்களைப் போய்ச் சேராது. ஆனால், உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்கள் விஷயத்தில் அப்படியன்று. அவர்களுக்கு எம் உதவி அகத்தியம் வேண்டும்.

மனிதன்தான் செய்நன்றி மறந்தாலும், உத்தரிக்கிற ஆத்துமாக்கள் அப்படியன்றி அவர்கள் தங்கட்கு உதவிபுரிந்தோரை என்றும் மறவாமல் மோட்சம்போய்ச்சேர்ந்தபின் தேவசந்நிதானத்தில் எங்கட்காக அதாவது தங்கட்கு உதவி புரிந்தவர்கட்காக எப்போதும் மறக்காமல் ஆண்டவரிடம் இரந்து மன்றாடி உதவிபுரிவார்கள். எனவே, எங்களாலான மட்டும் இந்த ஆத்துமாக்களுக்கு இயன்ற உதவிகளைப் புரிந்துவருவோமாக! விசேஷமாக எம குடும்பத்தாருக்காகவும், எம் குடும்பத்தைச் சேர்ந்த மற்றும் இன்பந்தக்களுக்காகவும் உருக்கமாக வேண்டிவருவோமாக! எம்மில் எத்தனையோ பேர் தங்கள் தங்கள் குடும்பத்தில், தங்கள் கண்ணுக்கும் கண்ணான, உயிருக்குயிரான தங்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## கண்டோம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியாரின் தபாற் தலையை!

ஜேர்மன் நாட்டில் வெளியிட்ட நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியாரின் தபாற்தலை கொழும்பு பம்பலப்பிட்டி அரசாங்க மாடியில் வசிக்கும் சுவாமி ஞானப்பிரகாசியாரின் உறவினரான திரு. போலினஸ் தம்பிமுத்து அவர்களிடம் இருக்கின்றது. ஓரளவு சிதைந்த நிலையில் காணப்படும் இத்தபாற்தலையைப் பண்டிதர் க. யோ. ஆசிநாதன் அவர்களும், நானும் சென்று கண்டோம். அதில்,

P. Gnanaprakasar, 10
Einaeim,
Hindu Missionar,
D. Oblaten, D. U. J. P.

என்னும் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிகின்றன. சில எழுத்துக்கள் அழிந்துள்ளன. சுவாமிகளின் உருவம் அழகாகப் பொறிக்கப் பட்டுள்ளது.

சுவாமி அவர்களைப்பற்றி விரிவான நூலொன்றை இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பூலோசிங்கம் அவர்கள் விரைவில் வெளியிட உள்ளார் என்பதையும் அறிய முடிந்தது.

இலங்கை அரசாங்கம் சுவாமிகளின் உருவம் பொறித்த தபாற்தலையினை விரைவில் வெளியிட வேண்டுமென வற்புறுத்துவது கிறிஸ்தவர்களின் முக்கிய கடமையாகும் என்பதைப் பலர் இன்றுவரை உணராமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஆகவே, அன்பர்களே! தூங்கியதுபோதும்,தடித்தெழுங்கள். துணிந்து செயற்படுங்கள். அடுத்த வருடம் சுவாமிகள் மறைந்த 25-வது வருடமாகும். எனவே, இப்பொழுதுமுதலே அரசாங்கத்தையும், தபாற்-தந்திப் போக்குவரத்து மந்திரியையும் தட்டிக்கேட்கத் தயங்காதீர்.

"தட்டுங்கள் திறக்கப்படும்"

இல்லாவிடில், நாமமது கிறிஸ்தவராய் வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்! —புலவர் ஏ. டபிள்யூ. ஏ.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளைஞர் உலகு

அன்புச் சோதரரே!

மனித சமுதாயத்தில் பெருமையும் பொறுப்பும் வாய்ந்த சமுதாயம் இளைஞர் சமுதாயமே. அனைத்துலகும் ஒப்புக் கொண்ட உண்மையிது. புதுமையையும் புரட்சியையும் விரும்புபவர்கள் இளைஞர்கள். இதனை நாளேடுகள் நன்கு நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்தப் புதுமையும் புரட்சியும் தீயவழிக்கு மாறுமானல் அதனல் ஏற்படும் விபரீதங்களை எடுத்துக் கூறமுடியாது. நன்மையான வழிக்கு மாறுமானல் உலகம் அடையும் நன்மையோ அதிகம்.

இவற்றை உணர்ந்து இளைஞர் சமுதாயம் வாழுமானல் நாமும் நலன் பெறுவதோடு நம் நாடும் நலன் பெறும். எனவே சேவையே எமது இலட்சியமாகக் கொள்ளுவோம்.

சோதரன்.

## அறிவு யுகத்திலும் அறியாமையா?

அறிவுயுகமென்று கூறப்படும், இந்நூற்ருண்டிலும் நம் மக்களிற் பலர் அறியாமை இருளிலே மூழ்கி இருக்கின்ருர்கள். இதன் காரணமாகக் கண்மூடித்தனமான மண்மூடிப்போக வேண்டிய கொள்கைகளை—கோட்பாடுகளை உண்மையென நம்பி அதற்கு உரமிடுகின்ருர்கள். அவற்றுள் தீண்டாமையுமொன்று. "பிறப்புக்குமெல்லா உயிர்க்கும்" என்று வள்ளுவரும், "சாதி இரண்டொழிய வேறில்லை" என்று ஒளவையாரும், "சாதிகளில்லையடி பாப்பா" என்று பாரதியாரும் கூறிப் போந்தனர். வள்ளுவருக்கும், ஒளவையாருக்கும், வரகவிபாரதியாருக்கும் விழாவெடுத்து வரம்பேசும் நாம் பழுதின்றி அவர்கள் சொன்ன கொள்கைகளைத் தழுவிக்கொண்டேயிருக்கிறேம். இதனல் என்ன பயன்? எனவே இத்தகைய பெரியார்களுக்கு விழாவெடுப்பதிலும் பார்க்கத் தீண்டாமை போன்ற சாபத்திட்டை நீக்கப்பாடுபடுவதே நாம அவர்களுக்குச் செய்யும் கைம்மாறு.

எம் உடன் பிறவாச்சகோதரர்களில் ஒரு பகுதியினரை ஆண்டவன் இருக்கும் ஆலயங்களுக்குள் புகாதீர்கள் என்றும், நாம் தோண்டிய இணறு, குளங்களில் நீர் மொள்ளாதீர்கள் என்றும், நாம் தடைபோடுவோமேயானல் நாம் பகுத்தறிவுள்ளவர்கள் என்று சொல்ல முடியுமா? அதனைக் கண்டு ஆண்டவன்தான் பொறுப்பாரா?

இத்தகைய தீயகொள்கைகளை அழிக்கக் காந்தியடிகள் அகிம்சா வழியைப் பின்பற்றினர். மக்களின் மனமாற்றத்தின் மூலமே இதற்கு நிரந்தரப் பரிகாரத்தைத் தேடலாமென்பது காந்தியடிகளின் கருத்தாகும். பலாத்காரத்தின் மூலம் இப்பிரச்சனையைதீர்க்க முயல்வது "குளிக்கப் போய்ச் சேறு பூசிய" கதையாக முடியும். ஆகையால் நாமும் அகிம்சா வழியில் மக்களைச் சிந்திக்கச் செய்து அவர்கள் மனம் மாறி "நாம் இதுவரை தவருன வழியில் வாழ்ந்தோம்" என்பதை உணரச் செய்ய வேண்டும். இத்தகைய பரிகாரத்தின் மூலமே தீண்டாமைக்கு நிரந்தரமான சாவு மணி அடிக்க முடியும். இளைஞரே இதில் உங்கள் பங்கு?

"இரா செழியன்"

## "என் இளமையின் மகிழ்ச்சி யேசு ஒருவரே"

இளமை என்றதும் எத்தனை எண்ண அலைகள் தோன்றி மறைகின்றன. இளமை ஆற்றல் மிக்கது, ஆர்வம் கொண்டது. வீரம் பூண்டது. தியாகம் செறிந்தது. துணிவு நிறைந்தது. இப்படியே நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனல், இப்படியான இளமைப்பருவத்திலே இறைவன் பக்கம் மட்டும் நமது உள்ளம் ஈர்க்கப்பட்டுவிட்டால் நமது இன்பம் பொங்கும் கடலாக மாறிவிடும் என இளம் புனிதர்களின் உள்ளங்கள் சான்று பகர்கின்றன.

புனித பங்கிராஸ் கிறீஸ்தவன் எனக்குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலைக்களத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அரசன் பலவித வாதனைகளையும் காட்டி அவரைப் பயமுறுத்திக் கிறீஸ்துவைக் கைவிடும்படி எச்சரிக்கை காட்டினன். சிறுவன் தயங்கவில்லை. "என் இளமையின் மகிழ்ச்சி இயேசு ஒருவரே" எனக்கூறி கொலைகாரர்கட்குத் தன் உயிரை அர்ப்பணஞ் செய்தார். ஆம். "எம் இளமையின் மகிழ்ச்சியும் யேசு" ஒருவராக இருப்பாராக. நமது இளமையின் மகிழ்வை உலகம் மாசுபடுத்தாதிருப்பதாக.

செல்வி. தே. பத்மிமா
உடுவில்.

## விவாத மேடை

பெற்றேரின் விருப்பத்தின்படி செய்யும் திருமணம் நன்மையானதா? தீமையானதா?

இக்கருத்து மோதலில் நன்மை என்று கருதுபவர்கள் அதற்கான கருத்துகளையும் தீமை என்று கருதுபவர்கள் அதற்கான கருத்தையும் மிகவும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதி இரு வாரங்களுக்குள் அனுப்பி வைக்கவும். தாளின் ஒரு பக்கத்தில்மட்டும் எழுதவும்.

'இளைஞர் உலகு'
காவலன் அலுவலகம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## புதிய குரவருக்கு வரவேற்பு

மயிலிட்டி உப-தபாலகத்தைச் சேர்ந்த திரு. டி. அன்ரனி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் அருட்திரு வில்பிறட் தேவதாசன் அண்மையில் குருத்துவாபிஷேகத்தின் பின்பு தமது சொந்த ஊராகிய மயிலிட்டிக்கு வருகைதந்தபோது அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், அயலூராகிய ஊறணியிலும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**மயிலிட்டியில்:** சென்ற 23-ந்தேதி காலை பலாலிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக மயிலிட்டி காணிக்கைமாதா கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கூட்டுப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப் பட்டது. பலிப்பூசையில் வண. செல்வரட்ணம் அடிகளார் நிகழ்த்திய சொற்பெருக்கு யாவரையும் கவரக்கூடியதாய் அமைந்தது. கூட்டுப்பலிபூஜை முடிந்ததும், பங்குக்குரவர் வண. வி. ஆர். தார்சிசியஸ், ஓ. எம். ஐ. அடிகள் தலைமையில் வண. மதுரநாயகம் அடிகளார் சிறப்புரை வழங்கினர். பின்பு பரிசில்களும், வாழ்த்துப் பத்திரமும் புதியகுரவருக்கு வழங்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு அநேக குருமார் கன்னியர் பங்குபற்றினர். புதிய குரவரின் நன்றியுரையை யடுத்து அவர்களது இல்லத்தில் விருந்துபசாரத்துடன் விழா முடிவெய்தியது.

**ஊறணியில்:** புதிய குரவரின் தந்தையின் சொந்த ஊராகிய ஊறணிப்பங்கு மறுநாள் 24-ந்தேதிமாலை விழாக்கோலம் பூண்டிருந்தது. புனித அந்தோனியார் ஆலயத்தில் பலிபூசை முடிந்ததும், பங்குக் குரவர் வண. எல். துரைசிங்கம், ஓ. எம். ஐ. அடிகள் தலைமையில் வரவேற்பு உபசாரம் வாசித்து அளிக்கப்பட்டதுடன், அநேக பரிசில்களும் வழங்கப்பட்டது. ஈற்றில் புதியகுரவர் தமது நன்றியுரையில் தமக்கும், ஊறணிக்கும், விழாவிற்கும் உள்ள தொடர்பைத் தெளிவாக எடுத்துரைத்ததுடன், தம்மைப் பின்தொடர்ந்து பல குருப்பிரசாதிகள் தோன்ற வேண்டுமென இறைவனை வேண்டுகிறேன் எனக் கூறி முடித்தார். இதையடுத்து புதிய குரவருக்கும், அவரது பெற்றேருக்கும் அப்பகுதி மக்கள் குழுத் தலைவர் திரு. ம. மரியாம்பிள்ளை அவர்களின் இல்லத்தில் இராப்போசன விருந்தளிக்கப்பட்டது.

ஆர். எல். சேவியர்

யாழ். மறைமாவட்ட
மறைக் கல்வித் தோவு
நாள் : 22-11-72
நேரம் : காலை 9 மணி

## 60 ஆண்டு வயிர யூபிலி

ஊர்காவற்றுறை மேற்கைச் சேர்ந்த திரு. பேதுருப்பிள்ளை குருசுமுத்து அவர்களும், பாரியாரும் திருமணம்செய்து அறுபது ஆண்டுகள் நிறைவாகிய வயிரயூபிலி விழாவைக் கடந்த 11-10-72 புதன்கிழமை கண்டு களித்தனர்.

அன்று பி. ப. 5மணிக்கு சந்தியோகுமையோர் ஆலயத்தில் மகாவந் ஆயர் எல். ஆர். அன்ரனி அவர்களால் நிறைவேற்றப்பட்ட திவ்விய பூசைப்பலியில் யூபிலிநாயகரும், பாரியாரும் பங்குபற்றி இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.

பூசைப்பலி முடிந்ததும் ஆலய முன்றிலில் யூபிலி நாயகரும், பாரியாரும் உறவினர்களால் மாலைகள் அணிவிக்கப்பெற்று அவர்கள[illegible]புத்திரன் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி திரு. கே. செபமாலை அவர்களது இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு நடைபெற்ற விருந்தில் உறவினர்களும், நண்பர்களும் கலந்துகொண்டனர். திரு. பேதுருப்பிள்ளை குருசுமுத்து அவர்கள் ஊர்காவற்றுறைமேற்கு சந்தியோகுமையோர் ஆலயத்தில் பல்லாண்டுகள் கோவிற் பணியாளராய் (சங்கிரிஸ்தாம்) பணியாற்றியவர் என்பது குறிப்பிடற்குரியது.

## உத்தரிப்பு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தையையோ, தாயையோ, சகோதாரரையோ, கணவனையோ, மனைவியையோ, பிள்ளைகளையோ, மருமக்களையோ, பேரப்பிள்ளைகளையோ, பேரன் பேத்திமாரையோ, பெரிய தகப்பன், சிறிய தகப்பன், பெரிய தாய், சிறிய தாய், மாமன், மாமி போன்ற இவர்களையோ இழக்துபோகாத குடும்பம் ஒன்று மேயில்லை என்னலாம். இவர்கள் எல்லோரும் அந்த அகோர அக்கினிச் சுவாலையில் கிடந்து எங்களை அதாவது, தமதவர்களை நோக்கி இரு கரங்களையும் உயர்த்தி எங்கள் உதவியை வேண்டி ஓலமிடுகிருர்கள். இதை நாம் கண்டும் காணுதவர்போலவும், கேட்டும் கேளாதவர் போலவும், கவனிக்காமல் கண்மூடித்தனமாய் நடக்கலாமா? இது நீதியா—தருமா? தேவனுக்கேற்குமா? எனவே, நாம் என்றிலும் பார்க்க, விசேஷமாய்த் திருச்சபையால் நியமிக்கப்பட்ட இந்த உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களின் மாதத்தில், பொதுவாக இந்த ஆத்துமங்களுக்கும், விசேஷமாய் நாம் இழந்துபோன நம் குடும்பத்தாரின் ஆத்துமங்களுக்காகவும் நம் செபவேண்டுதல்களைப் பன்மடங்காக அதிகரித்து, நம்செபதபதான தர்மங்களினுலும், பூசை புண்ணியங்களினுலும் மற்றும ஞானமுயற்சிகளாலும, நற்கிரிகைகளாலும், நம்மாலானமட்டும் இவர்களுக்கு உதவி புரிய வருந்துவோமாக! இவர்கள் பரகதியடைந்தபின் பன்மடங்கு நன்றிக்கடமையுடன் ஆண்டவருடைய சமுகத்தில் இடையருது எங்கட்காக—எங்கட்கு என்றும் வேண்டிய இகபர நன்மைகளுக்காக இரந்துமன்ருடி உதவிபுரிவார்கள் என்பது திண்ணம். சுபம்!

## கிறீஸ்தவ சபைகளின் ஐக்கிய இலட்சியம் யாது?

சென்றமாதம் வத்திக்கான் ஒற்றுமைக் காரியாலய அதிபர் கருதினல் வில்டபிறுன்ட் அடிகளார் ஆங்கில நாட்டுக்கு விஜயம் செய்து, அங்கிளிக்கன்சபை அதிபர் டக்டர் ரும்சே அடிகளாருடன் அவரது வாசஸ்தலமாகிய லம்பெத் மாளிகையில் உடன் வதிந்து வந்த மூன்று தினங்களில் கிறீஸ்தவசபை ஒற்றுமைக்கு அங்கு நடத்திய ஆலோசனைகளாலும், காட்டப்பட்ட பரஸ்பர நன்மதிப்பினுலும், பெரும் முன்னேற்றத்தைப் பெற்றுச் சென்றிருக்கின்ருர் என்று கூறப்படுகிறது. லம்பெத் மாளிகையில் அவர் ஆற்றிய ஒரு விசேஷ சொற்பொழிவில் எதிர்பார்க்கப்படும் கிறீஸ்தவ சபைகளின் ஐக்கிய இலட்சியத்தை அவர் தெளிவாக விளக்கியுள்ளார். ஐக்கியம் ஏற்படுவதற்கு இருசபைகளும் ஒருபடக் கலத்தல் அவசியமல்ல என்பதை அவர் யாவரும் அறியத்தக்கதாக விளக்கிச் சென்றதே அவரது ஆங்கில நாட்டின் விஜயத்தினல் ஏற்பட்ட பல நன்மைகளுட் பெரியது என்று ரும்சே அடிகளாரே பாராட்டுகின்ருர்.

### கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்

கத். நற்சிந்தனை 5நிமி.
கார்த்திகை— 11,12,13
நேரம் : காலை 6-10
சங். சகோதரி றூத்.
F. M. M.
பூண்டுலோயா:

* * *

சிறுவர் நிகழ்ச்சிகள் 15நிமி.
கார்த்திகை — 15
நேரம் : மாலை 6-15
திரு: ஏ. பர்ணுந்து

* * *

**மன்னிப்பு:**

சென்ற ஞாயிறு (5-11-72) நாம் நேயர்களுக்கு அறிவித்தது போல நிகழ்ச்சியை ஒலிபரப்ப முடியவில்லை. இத் தவறுக்கு மனம் வருந்துகிறேம், மன்னிக்க வேண்டுகிறேம.
நன்றி.—செல்வம், உ.ம.தி.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org